# அக்டோபர்– 01 ொ– திங்கள்

குழந்தை இயேசுவின் புனித தெரேசா
ஆண்டவரே, என் வழக்கின் நியாயத்தைக் கேட்டருளும்: திபா. 17:1

## முதல் வாசகம்: யோபு1 : 6 –22

ஒருநாள் தெய்வப் புதல்வர் ஆண்டவர் முன்னிலையில் ஒன்றுகூடினர். சாத்தான் அவர்கள் நடுவே வந்துநின்றான். ஆண்டவர் சாத்தானிடம், "எங்கிருந்து வருகிறாய்?" என்றுகேட்டார். சாத்தான் ஆண்டவரிடம் "உலகைச்சுற்றி உலவிவருகிறேன்" என்றான்.ஆண்டவர் சாத்தானிடம், "என் ஊழியன் யோபைப் பார்த்தாயா? அவனைப்போல் மாசற்றவனும், நேர்மையானவனும், கடவுளுக்கு அஞ்சி தீமையானதை விலக்கி நடப்பவனும் மண்ணுலகில் ஒருவனும் இல்லை" என்றார்.மறுமொழியாக, சாத்தான் ஆண்டவரிடம் "ஒன்றுமில்லாமலா யோபு கடவுளுக்கு அஞ்சி நடக்கிறான்? அவனையும் அவன் வீட்டாரையும், அவனுக்குரிய அனைத்தையும் நீர் சூழ்ந்துநின்று காக்கவில்லையா? அவன் கைவேலைகளுக்கு ஆசி வழங்கவில்லையா? அவன் மந்தைகளை நாட்டில் பெருகச் செய்யவில்லையா?ஆனால், உமது கையை நீட்டும் அவனுக்குரியவற்றின்மீது கைவையும். அப்போது அவன் உம்முகத்திற்கு நேராகவே உம்மைப் பழிப்பான்" என்றான்.ஆண்டவர் சாத்தானிடம், "இதோ! அவனுக்குரியவை யெல்லாம் உன் கையிலே அவன்மீது மட்டும் கைவைக்காதே" என்றார். சாத்தானும் ஆண்டவர் முன்னிலையினின்று புறப்பட்டான்.ஒருநாள் யோபின் புதல்வரும் புதல்வியரும் தம் மூத்த சகோதரன் வீட்டில் உண்டு திராட்சை இரசம் குடித்துக் கொண்டிருந்தனர்.அப்போது தூதன் ஒருவன் யோபிடம் வந்து, "எருதுகள் உழுதுகொண்டிருந்தன் கழுதைகளும் அவற்றிற்கு அருகில் மேய்ந்து கொண்டிருந்தன.அப்போது செபாயர் பாய்ந்து, அவற்றைக் கைப்பற்றினர். ஊழியரை வாள் முனையில் வீழ்த்தினர். நான் ஒருவன் மட்டுமே தப்பி உம்மிடம் சொல்லவந்தேன்" என்றான். இதைச்சொல்லி முடிப்பதற்குள் இன்னொருவன் வந்து, "கடவுளின் நெருப்பு விண்ணிலிருந்து விழுந்து, ஆடுகளையும், வேலையாள்களையும் சுட்டெரித்துவிட்டது. நான் ஒருவன் மட்டுமே தப்பி உம்மிடம் சொல்ல வந்தேன்" என்றான்.இதைச்சொல்லி முடிப்பதற்குள் இன்னொருவன் வந்து, "கல்தேயர் மூன்று கும்பலாக வந்து ஒட்டகங்கள் மேல் பாய்ந்து அவற்றைக் கைப்பற்றிக் கொண்டனர். ஊழியர்களை வாள்முனையில் வீழ்த்தினர். நான் ஒருவன் மட்டுமே தப்பி உம்மிடம் சொல்ல வந்தேன்" என்றான். இதைச்சொல்லி முடிப்பதற்குள் இன்னொருவன் வந்து, "உம் புதல்வரும், புதல்வியரும் தம் மூத்தசகோதரன் வீட்டில் உண்டு திராட்சை இரசம் குடித்துக்கொண்டிருந்தனர்.அப்போது திடீரெனப் பெருங்காற்று பாலை நிலத்திலிருந்து வீசி, வீட்டின் நான்கு மூலைகளிலும் தாக்கியது. வீடு இளைஞர்கள் மேல் இடிந்து விழ, அவர்களும் மடிந்துவிட்டனர். நான் ஒருவன்மட்டுமே தப்பி உம்மிடம் சொல்ல வந்தேன்" என்றான்.யோபு எழுந்தார் தம் ஆடைகளைக் கிழித்துக்கொண்டார் தம் தலையை மழித்துக்கொண்டார். பின்பு தரையில் விழுந்து வணங்கி,"என் தாயின் கருப்பையினின்று பிறந்த மேனியனாய் யான் வந்தேன் அங்கே திரும்புகையில் பிறந்த மேனியனாய் யான் செல்வேன் ஆண்டவர் அளித்தார் ஆண்டவர் எடுத்துக்கொண்டார். ஆண்டவரது பெயர் போற்றப்பெறுக!" என்றார்.இவை அனைத்திலும் யோபு பாவம் செய்யவுமில்லை.கடவுள் மீது குற்றஞ்சாட்டவும் இல்லை.

**பதில்பாடல் :** ஆண்டவரே நான் அமைதியாய் இருக்க என் உயிரைக் காத்தருளும்.

## நற்செய்தி : லூக்கா9 : 46 - 50

அக்காலத்தில் சீடர்களிடையே தங்களுக்குள் பெரியவர் யார் என்ற விவாதம் எழுந்தது.இயேசு அவர்களின் எண்ணங்களை அறிந்து ஒரு சிறுபிள்ளையை எடுத்து, தம் அருகே நிறுத்தி,அவர்களிடம், "இச்சிறு பிள்ளையை என்பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக்கொள்பவர் என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்கிறார். உங்கள் எல்லாரிலும் சிறியவரே பெரியவர் ஆவார்" என்றார்.யோவான் இயேசுவைப் பார்த்து, "ஆண்டவரே, ஒருவர் உமதுபெயரால் பேய் ஓட்டுவதைக்கண்டு, நாங்கள் அவரைத் தடுக்கப்பார்த்தோம் ஏனெனில் அவர் நம்மைச்சாராதவர்" என்றார். இயேசு அவரை நோக்கி, "தடுக்கவேண்டாம் ஏனெனில் நமக்கு எதிராக இராதவர் நம் சார்பாக இருக்கிறார்" என்றார்.

**தியானம்:** இன்றையதியான வாசகங்களானது எவ்வாறான வாழ்க்கை வாழ்ந்து இறைவனுடைய அன்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், எவ்வாறான சூழ்நிலைகளிலும் இறைவன் எங்களைப் பாதுகாத்து வழிநடத்துவார் என்பதை தெளிவுபடுத்தகிறது. எமது வாழ்க்கையிலும் பலவிதசோதனைகள், ஏமாற்றங்கள், பழிப்புரைகள் வந்தாலும் நம்பிக்கையுடனும், நேர்மையுடனும் இறைவனுக்கு உகந்தவகையில் வாழும் பொழுது அனைத்திலுமிருந்து காப்பவராக இருக்கின்றார். அன்று யோபு ஆண்டவருக்கு உரியவராகவும், நேர்மையாளராகவும் இருந்தார். இருப்பினும் சாத்தானானவன் கடவுள்மேல் யோபு கொண்டுள்ள உறவை சோதிக்க முனைகின்றான். ஆனால் ஆண்டவரோ சாத்தானிடம் ஷஷயோபுவுக்கு உரியயாவற்றையும் உனக்குத் தருகின்றேன், அவன மேல் கை வையாதே" என்று கட்டளையிடுகின்றார். (யோபு 1:12) நற்செய்திவாசகத்தில் இறைவனை ஏற்றுக்கொள்பவர்கள் எப்படிப்பட்டவர்கள், எவ்வாறாக வாழவேண்டும் என்பதை சிறுபிள்ளையை ஏற்றுக்கொள்பவர் என்னை ஏற்றுக்கொள்வர் என்னை ஏற்றுக்கொள்பவர் தந்தையை ஏற்றுக் கொள்வர் என்று இயேசு சுட்டிக்காட்டுகிறார். இன்று நாங்கள் வாழும் வாழ்க்கை முறைகளினால் இறைவன் மேல் நம்பிக்கை குன்றியவர்களாக நான் பெரியவன், நீபெரியவன் என் வாழ்ந்து இறைஉறவிலிருந்து எங்களை நாங்களே விலகி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே நாங்கள் இதை உணர்ந்தவர்களாக யோபு எவ்வாறாக இறைவனுக்கு உகந்தவராக வாழந்தாரோ. அதே போன்று நாங்களும் வாழ்ந்து இறைவன் அனைத்து தீங்கும் எங்களை நெருங்கவிடாமல் பாதுகாப்பார் என்று விசுவசித்துவாழ்வோம்.